Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 66 | திங்கட்கிழமை 31 ஜனவரி 2022 | தை 18 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
ஊரெழு மேற்கு, சுன்னாகம் பகுதியில் பெண்ணொருவர் குளியலறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வீட்டில் தனிமையில் இருந்த செல்வத்துரை ரஞ்சினி (வயது- 55) என்ற பெண்ணே சடலமாகக் காணப்பட்டதாக, உயி 15



# மக்கள் புரட்சி வெடிக்கட்டும் தமிழர் தேசம் மலரட்டும்!

## கிட்டுப்பூங்காவில் விண்ணதிர்ந்த கோஷம்

யாழ்ப்பாணம், ஜனவரி 31
தமிழ் மக்களை இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்– 13ஆம் திருத்தத்துக்குள் – முடக்குவதற்கு முன்னெடுக்கப்படும் சதிகளை முறியடிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்புக்கு அமைவாக பல ஆயிரக்கணக்கான மக்கள் கிட்டுப்பூங்காவில் நேற்று அணிதிரண்டனர். சமஷ்டி அடிப்படையிலான தீர்வே வேண்டும் எனவும், தமிழர் தேசம் மலரட்டும் எனவும் அவர்கள் விண்ணதிரக் கோஷம் எழுப்பினர். 15

## தனது பூகோள நலனுக்காக இந்தியா எம்மைப் பலிக்கடாவாக்கக் கூடாது

### நல்லூரில் முன்னணி பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜன. 31
இந்தியா எமது நட்பு சக்தி. இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கும் அக்கறையுண்டு. ஆனால் தனது பூகோள நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமிழ் மக்களை இந்தியா பலிக்கடாவாக்கக் கூடாது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக் 15

## 'கறுப்பு ஜனவரி' கவனவீர்ப்பு யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 31
ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள் 15



"சும்மாவே எக்ஸாம் நேரத்தில கரண்ட் அடிக்கடி கட் ஆகும். இப்ப எரிபொருளும் இல்லையெண்டால் என்ன நடக்கப் போகுதோ...?"

### தற்போதைய களநிலைமைகளை விளக்கி –

## ஜெனிவாவுக்கு மீண்டும் கூட்டமைப்பு கடிதம்!

வவுனியா, ஜன. 31
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையொப்பத்துடன் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் 15

## அநுரகுமாரவின் வாகனம் மீது முட்டை வீச்சு

கொழும்பு, ஜன. 31
கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற மக்கள் விடு தலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க மீது முட்டை வீச்சு தாக்கு 09

## கடும்போக்கு அரசியல்வாதிகளே, இது சமாதானத்துக்கான நேரம்!

### நீதி அமைச்சர் அலி சப்ரி அழைப்பு



யாழ்ப்பாணம், ஜன. 31
தெற்கிலுள்ள கடும்போக்கு அரசியல்வாதிகளாகட்டும், வடக்கிலுள்ள கடும்போக்கு அரசியல்வாதிகளா 15

## பரீட்சைக் காலங்களில் மின்துண்டிப்பு வேண்டாம்

### கல்வி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 31
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் போது மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். 15

## பேருந்துச் சில்லில் சிக்கி பெண் பரிதாபச் சாவு!

### நாவற்குழியில் துயரம்



யாழ்ப்பாணம், ஜன. 31
பேருந்துச் சில்லினுள் அகப்பட்டுதலை நசிவடைந்தமையால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நாவற்குழிப் 09

## யாழ். சர்வதேச விமான நிலையம் அரசியலுக்காக மூடப்படவில்லை

### அபிவிருத்தி வேலைகள் நடக்கின்றனவாம் என்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 31
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் உள்ளக அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. அதன் காரணமாகத்தான் மூடப்பட்டுள்ளது. வேறெந்த அரசியல் 09

## வழங்கிய அதிகாரங்களை மீளப்பெற்றுக் கொள்ளோம்!

### புதிய அரசமைப்பில் 13ஆம் திருத்தம் தொடரும் என்கிறார் நீதி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 31
புதிய அரசமைப்பில் 13ஆம் திருத்தச் சட்டம் அதன் ஊடாகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமை என்பன ஒழிக்கப்படவுள்ளதாக சிங்கள ஊடகம் வெளியிட்ட 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய அரசமைப்பில் '13'க்கு இடம் இல்லை

**கொழும்பு, ஜன.31**

**புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைவு நகலில் மாகாணசபை முறைமை உள்ளடக்கப்படவில்லை என்றும், அதனால் மாகாணசபை முறைமையின்றியே புதிய அரசமைப்பு இயற்றப்படக்கூடும் என சிங்கள வார இதழான 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட சட்டவரைவை தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் த சில்வா தலைமையில் நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவானது புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என பொதுமக்கள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களிடம் கருத்துகளையும், ஆலோசனைகளையும், முன்மொழிவுகளையும் திரட்டியிருந்தது.

தற்போது நிபுணர்குழுவின் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. அடுத்த மாதம் புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவுநகல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அவ்வாறு கையளிக்கப்படும் வரைவு நகலில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு பதிலாக 1972 ஆம் ஆண்டு யாப்பில் இருந்தவாறு பிரதமர் பதவி முறைமை உருவாக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் தன்மை, பெயர், தேசிய கீதம், தேசியக்கொடி உள்ளிட்ட பொது விடயங்கள் தொடர்பில் பொதுவான இணக்கப்பாடு இருப்பதால், நாடாளுமன்றத்தில் இடம்பெறும் விவாதங்களின் பின்னர், இந்த வருடத்துக்குள் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-44)

# தனியாரிடமிருந்து மின் கொள்வனவு!

*மின்சக்தி அமைச்சு யோசனை*

கொழும்பு, ஜன.31

தனியார் மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான யோசனை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். அதேநேரம், ஐ.ஓ.சி. நிறுவனத்திடமிருந்து நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பெப்ரவரி மாதத்தில் மின்வெட்டு நிச்சயம்

கொழும்பு.ஜன.31

பெப்ரவரி மாதத் நடுப்பகுதியில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் மின்வெட்டு ஏற்படும் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போது அனல் மின் நிலையங்களால் நாட்டின் மொத்த மின் தேவையை முழுமை செய்யமுடியவில்லை. தரவுகளைப் பார்த்தால், நவம்பர் மாதம் முதல் நாட்டின் மொத்த மின்உற்பத்தியில் 65 வீதம் நீர் மின்சாரத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் அது தற்போது 25 வீதமாகக் குறைந்துள்ளது. எனவே மின்வெட்டு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## இலங்கை மின்சாரசபைக்கு இனி நேரடியாக எரிபொருள்

கொழும்பு. ஜன. 31

இலங்கை மின்சாரசபை இன்றும், நாளையும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் ஊடாக நேரடியாக எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியும் என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளின் அளவு குறித்து நாளை (இன்று) தீர்மானிக்கப்படும். தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து குறுகிய காலத்துக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

படங்கள்: ஐ. சிவசாந்தன்















13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் கட்சிகள் இந்தியாவிடம் கோருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியின் சில பதிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகளை ஏலம் விடுவதால் இந்திய உறவு பாதிக்காது

## வக்காலத்து வாங்குவதை நிறுத்துங்கள்; மீனவர்கள் போர்க்கொடி

**யாழ்ப்பாணம், ஜன. 31**

**இலங்கையில் கைப்பற்றப்பட்டுள்ள இந்தியப் படகுகளை ஏலத்துக்கு விடுவதால், இலங்கை - இந்திய உறவு பாதிக்காது என்று வடமாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.**




யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தத்தை வலியுறுத்தி 6 கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டனர். இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்திய ரோலர் படகுகளை ஏல அடிப்படையில் விற்பனை செய்வதை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இதனை வடக்கு மாகாணத்தில் உள்ள 23 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் சார்பில் எதிர்க்கின்றோம். இந்திய ரோலர் படகுகளால் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவதை இவர்கள் அறியவில்லையா?

இந்தியாவிடம் தமது நலன்களை தக்க வைத்துக் கொள்வதற்காக, எமது மீனவர்களின் வயிற்றுப்பிழைப்பில் மண் அள்ளிப் போடவேண்டாம்.

2004ஆம் ஆண்டு தாங்கள் விட்ட தவறை இன்று மீனவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். வடமராட்சிக் கிழக்கு, வத்திராயன் பகுதியில் தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் கரை திரும்பவில்லை. 11 கடல் மைல் தொலைவில் இந்திய ரோலர்களின் ஆக்கிரமிப்புக் காணப்பட்டது என்று தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

அதனால் இந்தியா ரோலர் படகுகளால் வத்தராயனில் காணாமற்போன மீனவர்களின் படகு மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் எமது பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு அழைத்தால் பலர் கலந்து கொள்ள மறுக்கின்றனர். கடந்த காலங்களில் இலங்கை மீனவர்களின் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் இந்தியாவில் விற்கப்பட்ட போது, தமிழ் அரசியல்வாதிகள் இலங்கை-இந்திய உறவைப் பாதித்துவிடும் திருப்பித் தாருங்கள் என்று கேட்கவில்லை.

இப்போது இலங்கைக் கடற்பரப்பில் உள்நுழைந்த சுமார் 200 இந்தியப் படகுகளை ஏலத்தில் விடுவதற்கு, தமிழ் அரசியல்வாதிகள் இந்தியாவைப் பகைக்கக் கூடாது என்கின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகள் எமது பிரச்சினையைத் தீர்க்க விரும்பாவிட்டாலும், எமது பிரச்சினைகளை நீர்த்துப் போகச் செய்யும் நோக்கில் இந்தியாவுக்கு வக்காலத்து வாங்குவதை நிறுத்த வேண்டும்- என்றார். (ம-4,20)

# சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு விரைவில் உடன்படிக்கை

## பஸில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையொன்றை எட்டுவது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கான அனைத்து வழிவகைகளும் ஆராயப்படுகின்றன.

மீண்டும் செலுத்த வேண்டிய சர்வதேச பிணைமுறிப் பத்திரங்கள் உள்ளன. எனவே நாங்கள் அவர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்- என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பொருளாதாரச் சரிவில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நிதி உதவியைப் பெறப் போவதில்லை என்று அரசு தெரிவித்திருந்த நிலையில், பஸில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அத்துடன் சர்வதேச நாணய நிதியம் முன்மொழியும் என்று எதிர்பார்க்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைச்சரவையில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் எதிராக கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,இ)

# வருடாவருடம் 600 மில்லியன் பிளாஸ்ரிக் கரண்டிகள் பாவனை

கொழும்பு, ஜன. 31

நாட்டில் வருடாந்தம் சுமார் 600 மில்லியன் பிளாஸ்ரிக் கரண்டிகள் பயன்படுத்தப்பட்டு சுற்றுச்சூழலில் வீசப்படுகின்றன என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்தில் சுமார் 50 மில்லியன் பிளாஸ்ரிக் கரண்டிகள் பாவனைக்குட்படுத்தப்பட்டு சுற்றுச்சூழலில் வீசப்படுகின் றன.

இவை சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

ஆகவே பிளாஸ்ரிக்குக்கு மாற்றாக மக்கும் இயற்கை பொருள்களை பயன்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# லூர்த்துமாதா கொடியேற்றம்

சாவகச்சேரி, ஜன. 31

மட்டுவில் லூர்த்து மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழா, நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அருட்திரு ஞானரூபன் அடிகளாரின் தலைமையில் திருப்பலி வழிபாடுகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

திருவிழாவின் ஒருபகுதியான நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை மாலையும் திருவிழா திருப்ப[illegible] வரும் வெள்[illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி1-131)




'ஒரு நூலகம் திறக்கப்பட்டால் நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' எண்டு பொதுவாச் சொல்லுவினம். கிளிநொச்சியில கரைச்சிப் பிரதேசசபை புதிசா, கொஞ்சம் பெரிசா ஒரு லைப்பிரரி கட்டத் தொடங்கியிருக்கு. முழுச்செலவும் 8 கோடி ரூபாவாம்.

இப்ப முதற்கட்டமா 4 கோடிக்கு வேலை தொடங்கியிருக்கு. அதுவும் பிரதேசசபைக்கு சொந்தமா வங்கியில இருந்த நிலையான வைப்பை எடுத்துத்தான் லைப்பிரரியைக் கட்ட வெளிக்கிட்டிருக்கினம். இப்பத்தைக் காலத்தில எல்லாரும் தங்கட பவரைக் காட்ட, தேவையில்லாத ஆணியளைப் பிடுங்கிக் கொண்டிருக்கேக்க, கரைச்சிப் பிரதேசசபை உண்மையாகவே எங்கட சந்ததிக்கு தேவையான உருப்படியான வேலை ஒண்டைத் தொடங்கியிருக்கு.

இந்தத் தைப்பூசம் அண்டைக்கு லைப்பிரரிக்கு அடிக்கல்லும் நட்டவை. கிளிநொச்சி மாவட்டத்துக்கே இனி பெருமையா இருக்கப்போற இந்த லைப்பிரரி திறப்பு விழாவுக்கு, அந்த மாவட்ட அரசாங்க அதிபர் எட்டியும் பாக்கேலை. சிலவேளை அவாக்கு அழைப்புக் குடுக்கேலையோ தெரியாது எண்டு பட்சி விசாரிச்சுப் பார்த்தால், கொஞ்சம் வேற சங்கதியள் வெளிப்பட்டுச்சு. அரசாங்க அதிபரையும் இந்த அடிக்கல் நடுகிற நிகழ்வுக்கு அழைக்க வேணும் எண்டு, சபையில தீர்மானம் எடுத்து, அழைப்பிழதை சபையின்ர செயலாளரே நேரில கொண்டு போய் குடுத்திட்டு வந்திருக்கிறார். அப்பிடி முறையா அழைப்புக் குடுத்தும் அம்மணி வரேலை.

சிலவேளை ஏதும் வேலைப்பளு, வருத்தம் எண்டு அப்பிடி இப்பிடியான தவிர்க்க முடியாத காரணங்களாலதான் அவா வரேலைப் போல எண்டு அங்க இருந்தவை தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லியிருக்கினம்.

ஆனால் அம்மணி லைப்பிரரி அடிக்கல் நாட்டு விழாவுக்கு வராததுக்கு காரணம் வேற. இஞ்ச அடிக்கல் நடுகிற அதேநாள், அதேநேரத்துக்குத்தான் எழுதுமட்டுவாழில ஒரு தனியாரின்ர பெற்றோல் செற் திறந்தவை.

அந்தப் பெற்றோல் செற் திறப்புவிழாவுக்கு பிரதம விருந்தினராகப் போனதால தான், அரசாங்க அதிபர் அடிக்கல் நட்டு விழாவுக்கு 'அப்செண்ட்'. சொந்த மாவட்டத்தில நடக்கிற நூலக அடிக்கல் நடுகையை விட, இன்னொரு மாவட்டத்தில நடக்கிற தனியாரின்ர பெற்றோல் செற் திறக்கிறதுதானே முக்கியமான விசயம் எண்டு அங்க போயிருக்கிறா போல.

மக்களுக்காக சேவை செய்யவெண்டு இருக்கிற, மற்றவைக்கு வழிகாட்ட வேண்டிய பெரிய அதிகாரிமாரே இப்பிடி ஒரு நல்லநோக்கத்தோட செய்யிற நிகழ்வுகளைப் புறக்கணிச்சிட்டு, தனியாரின்ர பொக்கற்றை நிரப்பிற கடை, பெற்றோல் செற் எண்டதுகளைத் திறக்கப் போறது எந்தவகையில நியாயம்? எண்டு கிளிநொச்சியில சனங்கள் கேக்குதுகள். அரசாங்க அதிபர் இதுக்கு என்ன பதில் சொல்லப் போறா...?

\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லின் விலை சடுதியாக வீழ்ச்சி!

## விவசாயிகள் கவலை

**மன்னார், ஜன.31**
**மன்னார் மாவட்டத்தில் நெல்லின் விலை சடுதியாகக் குறைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



பெரும்போக நெற்செய்கை அறுவடை தற்போது ஆரம்பித்துள்ள நிலையில், இந்த முறை விளைச்சல் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இரசாயன உரப் பாவனைக்கு அரசு தடை விதித்திருந்த நிலையில், நெற்செய்கை போதியளவு வெற்றியளிக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
இதுவரை 30 தொடக்கம் 40 மூடைகள் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் தற்போது 15 முதல் 20 மூடைகள் நெல்லே அறுவடை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இந்தநிலையில் நெல்லின் விலையும் கடந்த சில தினங்களாகச் சடுதியாகக் குறைந்துள்ளது.
தனியாரால் கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு விலை நிர்ணயம் இல்லாததால் நாளுக்குநாள் நெல்லின் விலை குறைந்து வருகின்றது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.
(எ-213)

# சம்பா அரிசி விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 31
சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை, இரண்டு ரூபாவால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி ஒரு கிலோ 128 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)



# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன.31
வலி.மேற்குப் பிரதேசசபையின் ஐந்தாம் வட்டாரத்தின் பிரதான வீதிகளிலும், உட்புற வீதிகளிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
வலி. மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் சுதர்சினியின் ஒழுங்குபடுத்தலில், பிரதேசசபையின் ஊழியர்களுடன் இணைந்து, வீதிகளிலுள்ள பற்றைகள் வெட்டி அகற்றப்பட்டன.
(ம-4-125)



# இராசமடு கிராம வீதியை திருத்துமாறு கோரிக்கை!

மன்னார், ஜன.31
நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இராசமடுக் கிராமத்தின் உள்ளக வீதியைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தவீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது என்றும், மழை காலங்களில் வெள்ளம் தேங்குவதால் பாடசாலை மாணவர்கள், அவசர மருத்துவ தேவைகளுக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து, வீதியைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(எ-இ)

# விவசாயிகளுக்கு இழப்பீடு புதிய சட்டவரைவு அவசியம்

## சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 31
உரத்தடையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும். அதற்கான சட்ட வரைவுகளை அரசு உடனடியாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
ஐக்கிய கமத்தொழிலாளர் பிரகடனத்தைக் கையளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
கற்பனை ரீதியாக உரத்தைத் தடை செய்து, இந்த நாட்டின் விளைநிலங்களை தரிசு நிலங்களாக மாற்றும் சதித்திட்டத்தை கையில் எடுத்துள்ள அரசு, தனது கூட்டாளிகளுக்கும், தனது எடுபிடிகளுக்கும் கோடிக்கணக்கில் சம்பாதிக்க வாய்ப்பளித்துள்ளது.
பொலனறுவை உட்பட ரஜரட்டப் பகுதிகளை மையமாகக் கொண்டே தானியக் களஞ்சிய தளமாக இலங்கை உருவானது.
அப்படியான வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேச விவசாயிகளுக்கு சீனா மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை ஊட்டும் அளவுக்கு கீழ்த்தரமான நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.
அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்த நம் நாட்டை, தற்போது சீன அரிசியால் நிரப்பும் நிலைக்கு இந்த அரசு தள்ளியுள்ளது.
இது பஞ்சத்துக்கான அறிகுறி.
உரத்தைத் தடை செய்து விவசாயிகளைப் பேரழிவில் ஆழ்த்திய அரசு, பாதிப்புகளுக்கு ஏற்ற வகையில் நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.
விளைநிலங்களை கிராமிய அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக மாற்றுவதோடு, விவசாயிகளைப் பலப்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பேற்கும்.
விவசாயிகளின் வாழ்க்கையுடன் விளையாடும் யுகத்துக்கு முற்றிப்புள்ளி வைப்போம் -என்றார்.
(ம-4-இ)



# வெளிநாடுகளுடன் சட்டவிரோத வர்த்தகம்

## ஐவர் கைது

கொழும்பு, ஜன. 31
இலங்கையில் இருந்தவாறு வெளிநாடுகளுடன் சட்டவிரோத நிதி வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், சுங்க அதிகாரிகளால் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் ஐவரும் டுபாய் செல்ல முயற்சித்தபோது, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து, பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைந்து வைக்கப்பட்டிருந்த 25 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-4-இ)

# திடீர்இறப்பு விசாரணைஅதிகாரிகள் நியமனம்



சாவகச்சேரி, ஜன. 31
தென்மராட்சிப் பிரதேச செயலக சாவகச்சேரி பிரிவுக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் இருவர் நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவையில் நீதி அமைச்சரால் அவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.
கைதடிதெற்கு கைதடியைச் சேர்ந்த சிவலிங்கம் [illegible] கைச் சேர்ந்த [illegible] ஆகிய இருவருமே சாவகச்சேரி பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.
(ம-ரி1-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100,000 கிலோ பூசணி மன்னாரில் அறுவடை

**மன்னார், ஜன. 31**

**மன்னார் - முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொண்டைச்சிப் பகுதியில், ஒரு லட்சம் கிலோ பூசணி அறுவடை செய்யப்பட்டது என்று தெரிவிக் கப்பட்டது.**



இலங்கை கஜு கூட்டுத்தாபனத் துக்குச் சொந்தமான 250 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட தர்ப்பூசணி, பூசணிக்காய், கெக்கரிக்காய் ஆகியவற்றின் அறுவடை நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை கொண் டைச்சி கஜு பண்ணையில் இடம் பெற்றது. இதன்போது, ஒரு லட் சம் கிலோ மதிப்பிடக்கூடிய பூச ணிக்காய்கள், 25 ஆயிரம் கிலோ தர்ப்பூசணிகள், 30 ஆயிரம் கிலோ கெக்கரிக்காய்கள் அறுவடை செய்யப்பட்டன.

இலங்கை கஜு கூட்டுத்தாபனத் தால், கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய் கையானது முற்று முழுதாக இயற் கையான முறையில் மேற்கொள் ளப்பட்டு, 3 மாதங்களின் பின்னர் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கஜு கூட்டுத்தாபனத் தின் பணிப்பாளர் சட்டத்தரணி சாரங்க ரத்னாயக்கா மற்றும் கஜு கூட்டுத்தாபன அதிகாரிகள் இணைந்து குறித்த அறுவடை நிகழ்வை ஆரம்பித்து வைத்த னர். (ம-ரி1-56-213)



# கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன. 31

இலங்கை கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டியில், பதக்கம் வென்ற மாணவர்களையும் பயிற்றுவிப்பாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு, கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி யின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் மீனலோஜினி இதய சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், 10 பதக்கங்களைப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களும் பயிற்றுவித்த ஆசிரியர்களும், கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்களால் கௌரவிக்கப்பட்டனர். (ரி1-159)

# 775 இல. பேருந்து சேவை நிறுத்தம்

சாவகச்சேரி, ஜன. 31

சாவகச்சேரியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி ஊடாக சுன்னாகம் செல்லும் 775 இலக்கப் பேருந்து, கடந்த மூன்று தினங் களாக சேவையில் ஈடுபடவில்லை. இதனால் மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். சாரதி இல்லாததால் சேவைக்குப் பேருந்து அனுப்பப்படவில்லை என்று இ.போ.ச. கோண்டாவில் சாலையினர் தெரிவித்துள் ளனர்.

புத்தூர் தொடக்கம் மட்டுவில், சரசாலை போன்ற இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக் கான மாணவர்கள் இந்தப் பேருந்தில் பய ணித்து வருகின்றனர். இந்த மார்க்கத்தில் ஒரேயொரு பேருந்தே சேவையில் ஈடுபடு கின்றது. சாரதி இல்லையெனக்கூறி பேருந் துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால், நாளாந் தப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். (ம-4-இ)

# மதுபானங்கள் மீட்பு



கிளிநொச்சி, ஜன.31

அனுமதிப்பத்திரமின்றி அரச மதுபானப்போத்தல் களை உடைமையில் வைத் திருந்த குற்றச்சாட்டில், தருமபுரம் குமாரசாமிபுரத் தில் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பொறுப் பதிகாரி டி.எம்.சதுரங்கவுக் குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகந பர் கைது செய்யப்பட்டுள் ளார் என்றும், அவரை நீதி மன்றில் முற்படுத்துவ தற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றன என்றும் தருமபுரம் பொலிஸார் தெரிவித்த னர். (எ-113)

# யாழ்.முஸ்லிம்களுடன் நீதியமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

நீதி அமைச்சர் அலி சப்ரி, யாழ்ப்பாண முஸ் லிம் மக்களை நேற்று முன்தினம் சந்தித்து, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டுள்ள குடும்பங்கள் எதிர் கொண்டுள்ள காணிப் பிரச்சினை மற்றும் வீட் டுத்திட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளை, சந்திப் பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த நீதி யமைச்சர், காணிப் பிரச் சினை முஸ்லிம் மக்க ளுக்கு மட்டுமல்ல வடக் கில் அனைத்து மக்க ளுக்கும் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினரிடம் பேசி நடவ டிக்கை எடுக்கப்படும்- என்றார். (ம-4,27)





# கிளி.இந்துக் கல்லூரியினருக்கு கொரோனாத் தடுப்பூசி

கொடிகாமம், ஜன.31

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கி ழமை பைஸர் தடுப்பூசி ஏற்றப்பட்டது. கிளி நொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனையினரால் தரம் 7,8,9,10 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 264 பேருக்கு பைஸர் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப் பட்டன. (வ-159)

# மாங்குளத்தில் நீதிமன்ற கட்டடத் தொகுதி திறப்பு

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்றக் கட் டடத் தொகுதி, கடந்த வியாழக்கிழமை நீதி அமைச்சர் அலி சப்ரியால் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீதிமன் றில் கடமையாற்றிய அதிகாரிகளின் அயராத முயற்சியின் பயனாக, மாங் குளம் பகுதியில் சுற்றுலா நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலத் தில் துணுக்காய் பகுதியில் இடம் பெற்ற நீதிமன்றின் செயற்பாடுகள் காலப்போக்கில், மாங்குளத்தில் நிரந் தரக் கட்டடம் அமைப்பதற்கு வழிவ குத்தது. அதனடிப்படையில் துணுக் காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி, மாங்குளம் பகுதியில் அமைக் கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத் தொகு தியே வைபவரீதியாகத் திறக்கப்பட்டுள் ளது. (ம-4,19)





# கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாதம், ஜன.31

கிளிநொச்சி இந்துக் கல்லூரி யில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர், ஆசிரியர்களைக் கௌரவிக் கும் நிகழ்வு நாளை செவ் வாய்க்கிழமை கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் கல்லூரி ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் தலைவர் சு.வரத ராஜா தலைமையில் நடைபெ றும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

கல்லூரியில் பணியாற்றி இட மாற்றம் பெற்றுச்சென்ற 14 பேர் நிகழ்வில் கௌரவிக்கப் படவுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டது. (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவேந்திரவுக்கு எதிராக பிரிட்டனும் நடவடிக்கை

## தீவிரமாகப் பரிசீலிக்கிறது எனத் தகவல்

லண்டன், ஜன. 31

**இலங்கை இராணுவத்தினருக்குத் தடைகள் சிலவற்றை விதிப்பது தொடர்பில் பிரிட்டன் ஆலோசித்து வருகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் அமண்டா மில்லிங் இது தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் சர்வதேச மனித உரிமைத் தடைகளின்கீழ் வரக்கூடிய அனைத்து ஆதாரங்கள் மற்றும் சாத்தியமான தடைகள் தொடர்பாக பிரிட்டன் அரசாங்கம் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றது. எதிர்காலத் தடைகள் தொடர்பாக நாங்கள் ஊகங்களை வெளிப்படுத்துவதில்லை. அவ்வாறு செய்வது அவற்றின் தாக்கத்தைக் குறைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைப் பின்பற்றி இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிரான போர்க்குற்றத் தடைகளை விதிப்பதற்கு பிரிட்டனுக்கு இன்னும் என்ன ஆதாரம் தேவை என்று தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மக்டொனாக் கேள்வி எழுப்பியபோதே, அமண்டா மில்லிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதேவேளை, ஜெனிவாவில் இலங்கை தொடர்பான முதன்மைக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் பிரிட்டன் மனித உரிமைகள்சபையின் அடுத்த அமர்வுக்கு முன்னதாகச் சில நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

# தவறுகளைத் திருத்த வெட்கப்படக்கூடாது

## அரசுக்கு விமல் அறிவுரை



கொழும்பு, ஜன.31

அரசாங்கம் பிழைகளைத் திருத்திக்கொள்வதற்கு வெட்கப்படக்கூடாது. விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளிலிருந்து அரசாங்கம் விடுபட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாட்டின் வர்த்தக ரீதியான விவசாயம் பாதிக்கப்பட்டால் உணவுப் பாதுகாப்பும் பாதிக்கப்படும். நாட்டின் விவசாயத்துக்கு குந்தகம் ஏற்படும் வகையில் உரப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடாது. இப்போதாவது நாம் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)

# காலி துறைமுகத்தில் சுற்றுலா வலயம்

கொழும்பு, ஜன. 31

கொழும்பு துறைமுக நகருக்கு நிகராக, காலி துறைமுகத்தை அண்மித்த பகுதியில் சுற்றுலா வலயமொன்றை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது என்று துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

காலி துறைமுகத்தின் அபிவிருத்தியுடன், பயணிகள் கப்பல்களுக்கான புதிய பயணிகள் முனையம் மற்றும் 40 ஹெக்ரேயர் நிலப்பரப்பு கடல் நீரால் நிரப்பப்பட்டு, புதிய நில சுற்றுலா வலயத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்மூலம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீருக்கடியில் ஓய்வு விடுதிகள், நீர் விளையாட்டுப் பகுதிகள் மற்றும் ஹொட்டல்களைக் கட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# கையெழுத்துப் பிரதி போட்டிகளுக்கு விண்ணப்பிக்குக!

சாவகச்சேரி, ஜன. 31

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கையெழுத்துப் பிரதிகளுக்கான போட்டி இந்த வருடமும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாவல், சிறுகதை, கவிதைத்தொகுப்பு, சிறுவர் கதை, வரலாறு, கலாசாரம், தொல்பொருளியல், நாடக கலை, நுண்கலை, நாட்டார்கலை, நடனம், இசை, ஓவியம், சிற்பம், சினிமா, ஒளிப்படம் போன்ற துறையில் ஈடுபட்டிருக்கின்ற இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் தொடர்புகொண்டு, தேவையான அறிவுறுத்தல்களையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்று, எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு திணைக்களப் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே அறிவித்துள்ளார். (ம-ரி1-9)

# புலிகளுக்கு நிதி திரட்டல் இலங்கைப் பெண் கைது

கொழும்பு, ஜன. 31

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி திரட்டினார் என்ற குற்றச்சாட்டில், இலங்கைப் பெண் ஒருவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்ட இவரின் பெயர் மேரி பிரான்சிஸ்கோ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் சென்னைக்குச் சென்ற இவர், அண்ணாநகரில் தங்கி, அதே முகவரியில் குடியுரிமை பெற்றுள்ளார்.

இவர், விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியமை என்.ஐ.ஏ. விசாரணையில் தெரியவந்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-4-இ)

# யானை - மனித மோதல் தடுக்க ஆராய்ச்சிகளாம்

கொழும்பு, ஜன. 31

யானைகளிடமிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதற்காக, இலங்கையில் பல புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞான பீடத்தின் பேராசிரியரான அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்புடன் நிலத்தின் தேவை அதிகரித்து, காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் யானை - மனித மோதல்களுக்கு வழிவகுக்கும். எனினும், மின்சார வேலிகள் அமைப்புடன், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பழைய மற்றும் நவீன முறைகள் உள்ளன.

யானை - மனித மோதலுக்கு எந்த நாடும் வெற்றிகரமாகத் தீர்வு காணவில்லை. தற்போது சூரியசக்தியில் இயங்கும் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. வனகாப்பகங்களுக்குள் இந்தவேலிகளை அமைக்காமல், வீடுகள் மற்றும் வயல்களை சுற்றிலும் வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ம-4-இ)

# கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சிறையில் அடைக்க முயற்சி!

கொழும்பு, ஜன. 31

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சிறையில் அடைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது என்று பொரளையில் உள்ள தேவாலயத்தில் கைக்குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மருத்துவரின் மகன் ஒஷல ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கத்தோலிக்கர்களைச் சிக்கவைத்து, கர்தினாலை சிறையில் அடைக்கும் திட்டத்தை அரசாங்கம் தீட்டுகின்றது. பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை வெறும் நாடகம். எனது தந்தைக்கு மனநோய் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# தடுப்பூசிகள் ஏற்றாதவர்களே மருத்துவமனையில் அனுமதி

கொழும்பு, ஜன.31

கொரோனாத் தடுப்பூசி ஏற்றாதவர்களே அதிகளவில் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகிறார்கள் என்று சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் படுவான்துடுவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் மற்றும் ஒட்சிசன் தேவைப்பாடுடைய கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் விவரங்களைத் திரட்டிய போது அதில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுகின்றனர்.

டெல்டா திரிபால் பாதிக்கப்பட்டவர்களும் தொடர்ந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களே தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் கூடுதலாக சிகிச்சை பெறுகின்றனர். ஒட்சிசன் தேவைப்பாடு இவர்களின் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குற்றம் சொல்லல் தலைமைத்துவமன்று!

'வழிகாட்டுதல்' என்பது நல்லதொரு தலைவனுக்கான பண்புகளில் முதன்மையானது. தான் தலைமையேற்று நடத்திச் செல்கின்ற அணி, குழுமம், சமூகம், இனம், நாடு என்பன சீரான பாதையில் பயணித்து, அவற்றின் லட்சியத்தை அடையும் உபாயம் எதுவெனக் கண்டறிந்து அதன்படி வழிநடத்துபவனே உண்மையான தலைவன்.

தமிழினம் செய்த அதிர்ஷ்டவசத்தால், 2009 க்கு முன்னர் அப்படியொரு ஒப்பற்ற தலைவனைப் பெற்று, உலகின் முன் தலைநிமிர்ந்து நின்றது. ஆனால் மூன்று தசாப்தங்களாக நீடித்த அந்த அதிர்ஷ்டம், முள்ளிவாய்க்காலோடு முற்றுப்பெற்றது. இப்போது நம்மிடமுள்ள தலைவர்கள் எல்லோருமே, வழிகாட்டுதல் என்ற பண்பை மறந்துவிட்டு, 'குறைகூறுதல் அல்லது குற்றம் கண்டுபிடித்தலே' தலைமைத்துவப் பண்பென்று அதன்படி நடக்கிறார்கள். அதனால்தான் நம்மினத்துக்குள்ளே இருக்கின்ற ஒவ்வொரு கட்சியும், தம்மைச் சுற்றி மட்டுமே புனிதம் என்ற ஒளிவட்டம் இருப்பதாக நம்பிக்கொண்டு, பிற கட்சிகள் மீது சேறு பூசுதலையும், துரோகிப் பட்டங்களை 'பார்சலாக' அனுப்புவதையும் சிரமேற்கொண்டு செய்துவருகின்றன.

ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு விடயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இந்த அவதூறல்களையும் , துரோகப் பட்டமளிப்பு விழாக்களையும் நமது கட்சிகள் செய்வது வழக்கம். 'ஏக்க ராஜ்ஜிய', 'ஜெனிவா' என்று தொடர்ந்த அந்தக் குறளிவித்தை இப்போது 13 ஆம் திருத்தம்வரை நீள்கின்றது. இதன்போதெல்லாம் அவற்றில் இருக்கும் குறைகளை தூக்கிப் பிடித்து பேசுகின்றார்களே தவிர, அதனை எப்படி நிவர்த்தி செய்யலாம்? வரப்போகின்ற ஆபத்துக்களில் இருந்து தமிழினத்தை மீட்பதற்கான பொறிமுறை என்ன? தாயக மக்களின் வாழ்வாதாரத்தை எப்படி உயர்த்தலாம்? சகல கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான வழிவகைகள் எவை? தீர்வுக்கான சரியான வரைவு என்ன? என்றெல்லாம் கிஞ்சித்தும் ஆராய்வதே இல்லை. ஏதேனும்ஒருவிடயத்தில்முட்டையில்மயிர்பிடுங்கிவிட்டு, அதையே உரத்த குரலில் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம், மக்களின் கவனத்தை தம் பக்கம் ஈர்த்து, அதனூடாக தமது வாக்கு வங்கியை அதிகரிப்பதுதான் இப்போதுள்ள தமிழ்க் கட்சிகளினதும், அந்தக் கட்சிகளின் தலைவர்களினதும் அணுகுமுறையாக உள்ளது. ஆனால் , உண்மையில் அது நல்லதொரு தலைமைத்துவப் பண்புக்கு நேரெதிரான விடயமே.

குற்றம், குறை சொல்வது எல்லோருக்குமே எளிதான விடயமே. அந்தக் குறைகளைச் சரிசெய்து, எமது இலட்சியத்துக்கான பாதையை அடையும் வழியைக் கண்டுபிடிப்பது தான் சவாலானது. அந்தச் சவாலில் இறங்க எமது தலைவர்களுக்கு திராணி இல்லை. அதனால்தான் இப்போது 13 ஆம் திருத்தம் இனப்பிரச்சினைக்கான ஆரம்பப்புள்ளி என ஒரு தரப்பும், ஆரம்பப்புள்ளி அல்லவென இன்னொரு தரப்பும் எதிரும் புதிருமாகக் களமாடத் தொடங்கியுள்ளன. இரு தரப்புமே மற்றைய தரப்பில் உள்ள குறைகளை மட்டுமே சொல்கின்றனவே தவிர, எப்படி 13 ஆம் திருத்தத்தைக் கடந்து அல்லது '13' ஐ ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு மக்களுக்கான இறுதித் தீர்வை அடையலாம் என்ற கோடி காட்டுதல்களைக் கூட வெளிப்படுத்தவில்லை.

மக்கள் மீதும், தேசியத்தின் மீதும் தன்னலமற்ற பற்றுக் கொண்டவர்களாக இவ்விரு தரப்பும் தங்களைத் தாங்களே காட்டிக்கொள்ள நினைக்கிறார்களே தவிர, அதற்கான செயற்பாட்டுக் களத்தில் தமது சுயலாபத்துக்காக மக்களை இன்னமும் படுகுழிக்குள் தள்ளும் காரியத்தையே செய்கிறார்கள். இந்தியாவுக்கு ஆவணம் அனுப்புவதாலேயோ அல்லது நல்லூர்க் கோயிலில் இருந்து கிட்டுப்பூங்கா வரை பேரணி செய்வதாலேயோ எந்தத் தீர்வும் எமக்குக் கிட்டிவிடப்போவதில்லை. தங்கள் சொந்த விருப்பு, வெறுப்புகள், 'ஈகோ' என்பவற்றை தூக்கி எறிந்துவிட்டு, மக்களுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றுபடாவிட்டால், தீ[illegible] தமிழ் மக்களுக்கு எப்போதுமே கிட்டாத கா[illegible] விடும்.




நாளொரு நல்வார்த்தை

"அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவர செய்வது மேல்."
- ஜெபர்சன்.

# அரசாங்கத்தை வீழ்த்த ஓரணியில் திரளுங்கள்

## எதிரணிகளிடம் ராஜித கோரிக்கை

**கொழும்பு, ஜன. 31**

**இந்த அரசை வீழ்த்த, அரசுக்கு எதிரான ஆட்டத்தை ஒருங்கிணைந்த படையணியாக, ஒரு தலைவரின்கீழ் எதிரணிகள் முன்னெடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசிடம் தெளிவான வேலைத்திட்டம் இல்லை, ஜனாதிபதி இருக்கின்றார், பிரதமர் இருக்கின்றார், ஆனால் அமைச்சர்கள் பொதுவெளியில் உளறுகின்றனர். அதாவது நாட்டை எப்படி ஆள்வதென்பது இந்த அரசுக்குத் தெரியாமல் உள்ளது என்பதையே இது வெளிப்படுத்துகின்றது. அதேவேளை, எதிரணிகளிடமிருந்து நாட்டுமக்கள் விமர்சனங்களை மட்டும் எதிர்பார்க்கவில்லை.

தீர்வுகளையும், செயற்பாடுகளையும் எதிர்பார்க்கின்றனர். எனவே, எதிரணிகள் பொதுவானதொரு தளத்துக்கு வர வேண்டும். எனவே, ஒரு தலைவரின்கீழ் ஒன்றிணையவேண்டும். அப்போதுதான் இந்த அரசை வீழ்த்த முடியும்.

ஆனால், வீழ்த்துவதற்குத் தாமதம் ஏற்பட்டால், நாட்டில் வறுமை தலைவிரித்தாடும். மந்தபோசணை ஏற்படும். ஏன்? சோமாலியாவின் நிலை ஏற்பட்டுவிடும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அரசு மட்டுமல்ல, எதிரணியும் பொறுப்புக்கூற வேண்டிவரும்.

படையணிகளை உருவாக்கலாம். அந்தப் படையணிகள் எல்லாம் ஒரு படைப்பிரிவுக் குக் கீழ் வரவேண்டும். ஒரு கட்டளையின் பிரகாரம் செயற்பட வேண்டும். தனிப்பயணம் மேற்கொள்வதால் ஏற்படும் பாதிப்பைச் சிலர் விரைவில் உணர்வர்- என்றார்.(ம-4,44)

# கலாசாரம் நிலைத்தாலே தமிழனாக வாழ முடியும்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால், அந்த இனத்தின் கலை, கலாசார, பாரம்பரிய விழுமியங்களை அழித்தல் வேண்டும். அது தான் வரலாற்றில் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. தமிழனின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியன வாழ்கின்றபோது தான் தமிழன் தமிழனாக வாழமுடியும். இவ்வாறு யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார். அரியாலை , வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் புகழ், இசை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். ஈழத்தமிழ் இளையோர்கள் எந்தத் துறையிலும் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பது இந்த இறுவட்டு வெளியீடு ஊடாக நிரூபணமாகி நிற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ம-4,இ)

நாளை 01.02.2022 செவ்வாய்க்கிழமை தை 19
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 - 05.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரமதானம்

மன்னார், ஜன. 31

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு "எமது சுற்றுச் சூழலை நாமே பாதுகாப்போம்" என்ற கருப்பொருளை முன்வைத்து, கடந்த வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் மன்னார் பிரதான பாலத்தின் இரு கடற்கரையோரங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்டச் செயலர் அ. ஸ்ரான்லி டிமெலின் தலைமையில் ஆரம்பமான சிரமதானப் பணியில், கடற்கரையின் இருபக்கங்களிலும் துர்நாற்றத்துடன் காணப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்கள், பொலித்தீன்கள், கடற்பாசிகள் ஆகியவை அகற்றப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரமதானத்தில், மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், இடர் முகாமைத்துவ அதிகாரிகள், பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1-213-56)

# உணவுக்காக அலையும் விடுதி நோயாளர்கள்

சாவகச்சேரி,ஜன. 31

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலுள்ள சிற்றுண்டி நிலையம் ஒழுங்கற்ற முறையில் திறக்கப்படுவதால், விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் உணவுக்காக வெளியில் செல்லவேண்டியுள்ளது.**

குறித்த சிற்றுண்டி நிலையம் குத்தகைக்கு வழங்கப்பட்ட போதிலும், குத்தகைக்கு எடுத்தவர் சீராக அதனைச் செயற்படுத்துவதில்லை. இதனால் விடுதியில் தங்கியுள்ள தூர இடங்களைச் சேர்ந்த நோயாளர்கள், வெளியே உள்ள கடைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

விடுதி நோயாளி மருத்துவமனை வளாகத்தைவிட்டு வெளியே செல்ல முடியாததால், வளாக வாசலில் காத்திருந்து, வீதியில் செல்வோரிடம் பணம் கொடுத்தே உணவு மற்றும் தேநீர் ஆகியவற்றை வாங்க வேண்டியுள்ளது. (ஒ-4-9)



# பொங்கல் விழா

கிளிநொச்சி, ஜன. 31

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கலாசார மன்றத்தின் வருடாந்த பொங்கல்விழா, கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

விழாவில், விசேட பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வாக பல்கலை மாணவர்களின் முட்டி உடைத்தல், சாக்கோட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம் பெற்றன. (ம-ரி1,113)



யாழ்.இந்துக் கல்லூரிக்கு

# விவேகானந்தர் வருகை 125 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு, சுவாமி விவேகானந்தர் வருகையின் 125ஆவது ஆண்டு விழா கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ராம் மகேஷ், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் கோயம்புத்தூர் ஸ்ரீமத் சுவாமி ஹரிதானந்த மஹாராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சுவாமி விவேகானந்தர் நினைவுப்பேருரை ஆற்றினார். (ஒ-4,23)

# கட்டாரில் இலங்கையர் சுட்டுக்கொலை

கட்டார், டோஹாவில் இலங்கையர் ஒருவர் கடந்த புதன்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் பாதுகாப்புக் கடமையில் இருந்தவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

குடியிருப்புப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த வேளை இளைஞர் ஒருவர் தனது பெண் நண்பியுடன் உள்நுழைய முயற்சித்துள்ளார்.

அவரிடம் அடையாள அட்டை கோரியபோது இளைஞன் அடையாள அட்டையைக் காண்பிக்க மறுத்தமையால், காவலாளி அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. இதன்போது காவலாளி மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இளைஞன், அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான இலங்கையைச் சேர்ந்த காவலாளி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த மற்றுமொரு காவலாளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-இ)

# தாதியர் விவகாரத்துக்கு ஆனந்ததேரரும் காரணம்

*சுகாதார நிபுணர்கள் சங்கம் குற்றச்சாட்டு*

கொழும்பு,ஜன.31

நான்காண்டு பட்டப்படிப்பை முடித்த தாதி ஒருவரின் தற்போதைய சம்பளம், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஓர் ஊழியரின் மாதச் சம்பளத்தைவிடக் குறைவாக உள்ளது. அதற்கு அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம் என்று சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரான ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் வண. முருத்தெட்டுவே ஆனந்ததேரர் தாதியர்களின் போராட்டத்தைக் கண்டித்த போது, சுகாதார வல்லுநர்கள் சங்கத்தால் விமர்சிக்கப்பட்டார்.

முருத்தெட்டுவே ஆனந்ததேரர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளில் தலையிட முற்பட்ட போதிலும், தாதியர்களின் போராட்டத்துக்கு அவர் ஆதரவளிக்கவில்லை.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தற்போது உபவேந்தராக உள்ள போதிலும், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் காரணமாகவே, அரசியல் வட்டாரத்தில் முக்கியநபராக மாறியுள்ளார். எனவே தற்போது தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு அவருக்கு உள்ளது - என்றார். (ஒ-4-இ)

விவேகானந்தரின் இலங்கைப் பயணம்

# 125ஆவது ஆண்டு நிறைவு விழா யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில்



யாழ்ப்பாணம், ஜன. 31

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு 125ஆவது ஆண்டு நிறைவுவிழா, கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது, விவேகானந்தரின் திருவுருவப் படம் விருந்தினர்களுடன் ஊர்வலமாக மங்கல வாத்தியங்களின் இசையுடன் எடுத்துவரப்பட்டது. அத்துடன் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு, சிந்தனைத் துளிகள், வாழ்வியல் சிந்தனைகள், சமூகப் பணிகள் ஆகியவற்றுடன் விவேகானந்தரின் இலங்கைக்கான பயணம் காணொளியாகவும் காட்சிப்படுத்தப்பட்டது. நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானாந்தாஜி, கௌரவ விருந்தினராக தமிழ்நாடு, கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஹரிவ்ரதானந்த மகராஜ், சிறப்பு விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதரக பதில் துணைத் தூதுவர் வி.ராம் மகேஷ், யாழ்ப்பாணம் இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ.மகேந்திரசிங்கம், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-ரி1-125)



# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 31

இலங்கை 2021ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி மூலம் 15.12 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாகப் பெற்றுள்ளது என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தை விட, 2021ஆம் ஆண்டுக்கான வருமானம் அதிகம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்துச்...
பகுதியில் நேற்றுக் காலை 9.10 மணியளவில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது. விபத்தில் நாவற்குழி வடக்கைச் சேர்ந்த ஜீவராசா சுகிர்தா (வயது -52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த மேற்படி பெண் நாவற்குழிப் பகுதியில் இறங்கியுள்ளார். பேருந்தில் இருந்து இறங்கிய போது கால் இடறுப்பட்டு கீழே விழுந்துள்ளார். ஆயினும் சாரதி இதனைக் கவனிக்காமல் பேருந்தை எடுத்துள்ளார். இதன் போது பெண்ணின் தலைக்கு மேல் பேருந்தின் பின் சில்லு ஏறியுள்ளது. ஆபத்தான நிலையில் அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு பட்டா வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டார். அவர் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலுள்ள பேரக்குழந்தையை குறித்த பெண் பார்வையிட்டு திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ஒ-9-131-159)

அநுரகுமாரவின்....
தல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது அங்கிருந்தவர்களிடையே சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன், பின்னர் பொலிஸாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-இ)

யாழ்...
நோக்கமும் இல்லை. இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனாப் பேரிடர் காரணமாக நாட்டின் விமான நிலையங்கள் மூடப்பட்டன. அவை தற்போது மீளத் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மாத்திரம் தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பது ஏன் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு.

'கொரோனாத் தொற்றால் விமான நிலையங்கள் மூடப்பட்டன. தற்போது ஏனைய விமான நிலையங்கள் திறக்கப்பட்டதைப்போல பலாலி விமான நிலையமும் திறக்கப்படும். விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்யவேண்டியுள்ளமையால் குறிப்பாக விமான ஓடுபாதை விரிவாக்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் திறக்கப்படுவதில் தாமதம் நிலவுகின்றது. இதில் வேறு எந்த அரசியல் காரணங்களும் இல்லை' என்றார்- பீரிஸ். (ஒ-5-26)

வழங்கிய...
செய்தி பொய்யானது. நாம் வழங்கிய அதிகாரங்களை மீளப் பெறமாட்டோம். இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழு வரைவை இன்னும் தயாரிக்கவில்லை. அந்த வரைவை என்னிடமோ ஜனாதிபதியிடமோ அவர்கள் சமர்ப்பிக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில் சிங்கள ஊடகத்துக்கு அது எப்படி கிடைத்திருக்கும்? ஆனால், புதிய அரசமைப்பில் 13ஆம் திருத்தச் சட்டமோ அல்லது மாகாணசபை முறைமையோ ஒழிக்கப்படாது. நாம் வழங்கிய அதிகாரங்களை மீளப் பெறமாட்டோம்=என்றார். (ஒ-5-26)

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1933

மறைவு 28 . 01 . 2022

### திருமதி பாக்கியம் இராஜசிங்கம்

கலாநிதி வீதி. ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் இராஜசிங்கம் கடந்த (28.01.2022) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி - இராஜசிங்கம் (Supt of Auditor) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான பொன்னர் இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் முத்துத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும். சாந்தினி (U.K). வசந்தினி. காந்தினி (U.K).ஜெயந்தினி (U.K). ஜோதினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும். மனோரஞ்சன். இரட்ணதயா. காலஞ்சென்ற எல்மோ மற்றும் பாலேந்திரன். லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும். ஜோ. சுசைனா. நிரோசன். ஜெசிக்கா. ஜனிஸ். டெவினா. ஹவின். கிரிஷா. லோஜினி. அனோஜினி மற்றும் பிரிட்டிஸ். மக்ளின். லயோ. ஹார்ஷல். ரொம். கிரிஷாந்த். ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். ஏவா. ஹாய். குளோயி. லானா. ஐவி. எரிக். ரிக்கி. சித்விக். லைறா ஆகியோரின் பாசமிகு பூட்டியும். காலஞ்சென்றவர்களான கந்தையா. பொன்னுத்துரை. நவரத்தினம். நல்லத்தம்பி. சின்னப்பு. செல்லையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அரவது இல்லத்தில் நடைபெற்று. நல்லடக்கம் ஏழாலை வடக்கு. அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாநிதி வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(cs42564) (2.6)

## 6 வயது சிறுமி துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு மரண தண்டனை

பீகாரின் ஆராரியாவில் ஆறு வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இரண்டே மாதத்தில் இந்த வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



மகாத்மா காந்தியின் 75ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு டில்லி ராஜ்கோட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர்தூவி நேற்று மரியாதை செலுத்தினார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முன்னேற்றம் உண்டாகும். முதலீடுகளில் இலாபம் கிடைக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். இன்று பேச்சிலும் செயலிலும் கவனமாக இருங்கள். தெய்வ வழிபாடு நன்மை பயக்கும்.

**இடபம்:** யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். யோகம் கூடும். குடும்பத்தினரை மகிழ்விப்பதற்கான செலவுகள் அதிகரிக்கும். பணிக்காக வெளியூருக்கு செல்லும் நிலை உண்டாகும்.

**மிதுனம்:** சுப விஷயங்களில் தேவையான உதவிகள் கிடைக்கும். பணவரவு சம்பந்தமான முயற்சி ஒன்று வெற்றியடையும் கடன் பிரச்சினை தீர்வதற்கான வாய்ப்பு உண்டு.

**கடகம்:** இன்று பெரிய அளவில் முதலீடுகள் செய்வதை தவிர்க்கவும். உணவால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படாதபடி கவனம் தேவை. பணி தொடர்பான விஷயங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**சிம்மம்:** தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருமணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும். அதிர்ஷ்டம் அதிகரிக்கும். கட்டப் பணிகள் தொடரும்.

**கன்னி:** அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்பினால் நல்லது. பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கல்வி சம்பந்த... றம் ஏற்படும்.

**துலாம்:** அலுவலகத்தில் உங்களுக்கான மதிப்பு உயரும். நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி ஒன்று கிடைக்கும். கடன் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். கவலை ஒன்று தீரும். பிரச்சினைகள் குறைந்து தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** புதிதாக வீடு வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் உண்டு. உங்களது உழைப்பால் நிதி வளர்ச்சி சீராக இருக்கும். உங்களது முயற்சியால் குடும்பத் தேவைகள் நிறைவேறும்.

**தனுசு:** உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவுகளையும் எடுக்க வேண்டாம். பொது இடங்களில் மற்றவரிடம் கவனமாகப் பேச வேண்டும். உங்களது வேலையைமட்டும்கவனிப்பதுநல்லது. ...உற்சாகம் பெருகும்.

**மகரம்:** பிறருக்கு உதவும் பொருட்டு அடுத்தவர் கடமையை ஏற்காதீர்கள். கூடுதல் நன்மைகள் நடைபெறும் நாள். மகிழ்ச்சி கூடும். அடுத்தவர் விடயங்களில் தலையிட வேண்டாம்.

**கும்பம்:** தந்தைக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் இருக்கும். இன்று அம்பிகையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** திட்டமிட்டதைவிட இன்று அதிகப்படியான செலவுகள் இருக்கும். தாயாருக்கு மகிழ்ச்சியான நாள். வாகன யோகம் உண்டு. நண்பர்களுக்கு உதவுவீர்கள். பேச்சினால் நன்மை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவர்களுக்கு புதிய வழிகாட்டல்கள்

கொழும்பு,ஜன.31

இலங்கைக்கு வருகைதரும், வெளிநாட்டவர்களுக்கு, புதிய சுகாதார வழிகாட்டல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெளிநாட்டவர்கள் நாட்டுக்கு வருகை தந்தவுடன், விமான நிலையத்தில் நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோதனையின்போது 30 க்கும் குறைவான சி.ரி.பரிசோதனை முடிவுகளைக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கையர்கள் 7 நாள்கள் சுயதனிமைப்படுத்தப்பட்ட காலத்துக்கு இணங்கி, விமான நிலையத்திலிருந்து வெளியேறமுடியும்.

வீட்டில் தனிமைப்படுத்தலுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இருந்தால் மட்டுமே, அவர்கள் விமான நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவர்.

அதேவேளை, முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெற்றோருடன் வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், கொரோனாப் பரிசோதனையில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்படுவர்.

12 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட, ஒரு பைஸர் தடுப்பூசி செலுத்தியுள்ள சிறுவர்கள், தமது பெற்றோருடன் வெளியேற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அவர்களது அறிக்கைகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும். அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் 7 முதல் 14 நாள்கள்வரை மாறுபடும்-என்றுள்ளது. (ஒ-4-இ)

# மருத்துவமனைகள் நிறைவதால் தேவையற்ற அச்சம் வேண்டாம்

## முன்னேற்பாடுகள் கைவசம்



**கொழும்பு,ஜன. 31**

**கொரோனாத் தொற்றால் மருத்துவமனைகளில் தொற்றாளர்கள் அதிகரிப்பது குறித்து பொது மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்தமுறை தொற்று அதிகரித்த போது, அதிகமான படுக்கைகள் பெறப்பட்டன. நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் சுமார் 80 ஆயிரம் படுக்கைகள் உள்ளன. 63 அதி தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் கொரோனாத் தொற்றாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன. கொரோனாத் தொற்றாளர்களுக்கு நாடுமுழுவதும் 70 அதிதீவிர சிகிச்சைப் பிரிவுப் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அதிகரிக்கப்பட்ட ஒட்சிசன் திறன் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வருவதால், ஒட்சிசனை வழங்குவதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. தேவையானால், முந்தைய அலைகளின்போது செய்ததைப்போன்று ஒட்சிசனை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ஒ-4-இ)

# தரமற்ற 160 ரயில் பெட்டிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி



இந்தியாவிலிருந்து, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள 160 ரயில் பெட்டிகளால், ரயில்வே திணைக்களத்துக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை என்று ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ். விதானகே தெரிவித்துள்ளார்.

கடன் உதவித் திட்டத்தின் கீழ் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து 160 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. இந்த ரயில் பெட்டிகள் தரமற்ற இரும்புகளால் செய்யப்பட்டவை. இதனால் நாட்டு மக்களின் கோடிக்கணக்கான பணம் வீணடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## நீர் விநியோகம்

# விவசாயத்துக்கே முன்னுரிமை

கொழும்பு,ஜன.31

எதிர்காலத்தில் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறையும் பட்சத்தில், நீர் விநியோகம் விவசாயத்துக்கே முன்னுரிமைப்படுத்தப்படும் என்று நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்திக்கான நீர் விநியோகத்தை நிர்வகிப்பது அவர்களின் பொறுப்பாகும். பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கும்போது அனைத்தையும் கருத்திற் கொள்கிறோம்.

வறட்சியின் காரணமாக நீர்மட்டம் குறைந்தால், நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீர் வழங்கப்பட மாட்டாது. ஏனெனில் விவசாயத்துறையைப் பாதுகாக்கவேண்டும்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் பரிந்துரைகளை பரிசீலிக்கின்றோம். நாம் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதில்லை. நீர் தேக்கி வைக்கப்பட மாட்டாது. தேவைப்படும்போது விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



# அதிக விலைக்கு சிமெந்து விற்பனை

*சந்தேகநபர் கைது*

கொழும்பு,ஜன. 31

அதிக விலைக்கு சிமெந்து விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்த வீதிப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் 65 சிமெந்து மூடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4.இ)

# நகர் குடிசைவாசிகளுக்கு முறையான வீட்டு வசதிகள்

## நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை

கொழும்பு,ஜன.31

நகர்ப்புறங்களிலுள்ள குடிசைவாசிகளுக்கு முறையான வீட்டு வசதிகளை வழங்கும் திட்டத்தை, நகர அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுக்கவுள்ளது.

கொழும்புநகர மக்கள் தொகையில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் குடிசைகள், சேரிகள் அல்லது பாழடைந்த பழைய வீட்டுத் திட்டங்களில் வாழ்கின்றனர். இது நகரத்தின் மொத்த நிலப்பரப்பில் 9 வீதத்தை ஆக்கிரமித்துள்ளது. நகர்ப்புறங்களில் வசிக்கும் 40 ஆயிரம் குடிசைவாசிகளில் சுமார் 23ஆயிரம் பேருக்கு ஏற்கனவே வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியில் எஞ்சியிருக்கும் குடிசைவாசிகளுக்கு சுமார் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணி நகர அபிவிருத்தி அதிகாரசபையின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களின் மூலம் இதற்கான நிதி பெறப்படுகின்றது. மேலும், 2 ஆயிரத்து 996 வீடுகளை நிர்மாணிப்பதற்கு சீனாவிடம் நிதி பெறப்படும். 13 ஆயிரம் வீடுகளில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் குடிசைவாசிகள் இடமாற்றம் செய்யப்படுவர் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமான பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# அழகுக்கலை நிபுணர்கள் லண்டன் செல்ல வாய்ப்பு

கொழும்பு,ஜன. 31

இலங்கையிலுள்ள அழகுக்கலை நிபுணர்கள் 500 பேருக்கு, லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கற்கைநெறியைத் தொடருவதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார். பிரிட்டன் பிரதிநிதிகள் குழுவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னரே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அழகுத்துறையுடன் தொடர்புடைய 4 பிரிவுகளின்கீழ் இந்தக் கற்கையைத் தொடரமுடியும். பிரிட்டன் விரிவுரையாளர்களிடம் சிங்கள மொழிபெயர்ப்பு மூலமான விரிவுரைகளையும் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# பிரபாகரன் பட விவகாரம்: குடும்பஸ்தருக்குப் பிணை

மட்டக்களப்பு,ஜன.31

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உருவம் அடங்கிய ஒளிப்படத்தை தன்னுடைய பேஸ்புக்கில் பதிவிட்டார் என்ற குற்றஞ்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, புளியங்கண்டலடி வாகரையைச் சேர்ந்த குடும்பஸ்தரான கு.விஜயதாஸவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம்.பசீல் முன்னிலையில், வாழைச்சேனை மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அவரை, நிபந்தனைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இவர் கடந்த ஒருவருடமும் 2 மாதங்களுமாக தடுப்புக் காவலில் இருந்துள்ளார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொதுநூலக தேசிய வாசிப்பு மாதிரி நிகழ்வின் பதிவுகள் (ய)



யாழ்.போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டதை யடுத்து தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



வட்டு. இந்துக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடத்துக்கு மடிக்கணினியும் மல்ரிமீடியா ஒன்றும் வன்னி ஹோப் 'அவுஸ்திரேலியா நிறுவனம்' மற்றும் 'ரட்ணம் பவுண்டேசன்' நிதி அனுசரணையில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பாடசாலை நிர்வாகத்தினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ய-27)



கைதடி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.கஜேந்திரன் தலைமையில் வளர்மதி மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதற்கான 3 லட்சம் ரூபா நிதிஉதவியை வளர்மதி சனசமூக நிலைய புலம்பெயர் உறவுகள் வழங்கினர். (வ-159)



மீசாலை கனகாம்பிகை வித்தியாலயத்தில் பொங்கல் விழா, நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் வே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி1)



தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் புலம்பெயர் நாடுகளின் தலைவர் மருத்துவர் புவிநாதன் மற்றும் கழக உறுப்பினர்களின் ஏற்பாட்டில், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவத்துக்குத் தேவையான பொருள்கள், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று வழங்கப்பட்டன. (ரி1-9)



சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸின் தந்தையாரின் 29 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் தரம் 5 க்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.


## பெயர் மாற்றம்

செல்லையா நிமலாதேவி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை செல்லையா நிர்மலாதேவி என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் நிர்மலாதேவி என்றே கையொப்பம் இட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிபடுத்துகின்றேன்.

## வேலைவாய்ப்பு

### SWEETPARK(PVT)LTD

1. கணக்காளர் (பெண்கள் வயது 18-30)
2. துறைசார் முகாமையாளர்கள் (ஆண்கள் &பெண்கள் 18- 32)
3. விற்பனைபிரதி நிதி (ஆண்கள் 18-35வயது)
4. வரவேற்பாளர் (பெண்கள் 18-29)
5. சுத்திகரிப்பு பணியாளர் (ஆண்கள் பெண்கள்18-50 வயது)
6. பணியாளர்கள்

ஆண்கள் / பெண்கள் (18-30 வயது)

03.02.2022 (9am-5pm) மற்றும் 04.02.2022 (8 am-10.30am)

நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்க முடியும்.

SWEETPARK(PVT)LTD இன் கச்சாய்வீதி, சாவகச்சேரியிலுள்ள உணவுக்காடு உணவு விடுதியில் இடம்பெறும்.

**T.P: 076 760 9217 / 021 430 8743**

## மரண அறிவித்தல்

### பிரபல விஷகடி வைத்தியர் கலாபூஷணம்
### சண்முகம் பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற விற்பனைத்திணைக்கள ஊழியர்)



அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல விஷகடி வைத்தியர் சண்முகம் பஞ்சாட்சரம் அவர்கள் நேற்று (30.01.2022) ஞாயிற்றுக் கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் அன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு சின்னம்மா தம்பதியரின் மருமகனும், மதுரவேணியின் அன்புக் கணவரும், சண்முகதாசன் (சுவிஸ்), சந்திரதாசன் (சுவிஸ்), றமணி, வசந்தினி (பிரான்ஸ்), உசந்தினி (ஜெயந்தினி), மதுரகாந்தன (தபாலக உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியவாணி (சுவிஸ்), ஹேமலதா (சுவிஸ்), காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் இராசலிங்கம் (பிரான்ஸ்), சுதர்சன் (இலங்கைப் போக்குவரத்து சபை), விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருகா, ஹப்றினா, சோபியா, சனுக., லக்ஸ்மியா, ரதுசன், நீருஜா, வீனுஷா, விதுரன், சங்கீதன் சார்மிகன் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான நாகமணி பாக்கியலட்சுமியின் பெறாமகனும், அன்னலட்சுமி, செல்லமணி, புஸ்பமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வல்லிபுரம்- வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கலாபூஷணம் V.K. இரத்தினம், ஐயாத்துரை மகாலெட்சுமி மற்றும் நாகமணி சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வராசா-சிவனேஸ்வரி, சின்னராசா- இராசகிளி, தாமு-கனகம்மா, சின்னத்தம்பி-சீதேவி, கொன்ராசா-கமலேஸ்வரி, துரைராசா-இந்திரபுவனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2022) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39, வேலப்பர் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
0742059586 (மகன்)
077 8529 957 (மகள்)

(CS 18310)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் பரவும் கொரோனாத் தொற்று!

கொழும்பு, ஜன. 31

கொழும்பிலுள்ள பிரதான 10 பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்தந்த வகுப்பறைகள் மூடப்பட்டுள் ளன. இதனை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அத்துடன் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் பல பாடசாலைகளில் கொரோனாத் தொற்றால் ஆசிரியர்கள், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜன.31

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கரவெட்டி துன்னாலை பளியங்கையான் சிதம்பர விநாயகர் கோயிலின் பிரதம குருக்கள் கலாநிதி, சிவஸ்ரீ நா.கலாதரக் குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-ரி1)

## மரண அறிவித்தல்

மலர்வு 03 . 04 . 1951



உதிர்வு 29 . 01 . 2022

திருமதி

### விமலராஜா சறோஜினிதேவி (மனோ)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வதிவிடமாக கொண்டிருந்தும் பின் ஊரெழுவில் வசித்துவந்த திருமதி விமலராஜா சறோஜினிதேவி (மனோ) 29.01.2022 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் விமலராஜாவின் அன்பு மனைவியும், திருமதி தர்சினி ஜெகநாதன் (லண்டன்), அவர்களின் அன்பு தாயாரும், மார்க்கண்டு ஜெகநாதன் அவர்களின் மாமியாரும், ஆதவன், வாசுகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஸ்ரீகந்தராசா, சண்முகராசா காலஞ்சென்றவர்களான குகநாதன், சகுந்தலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பிள்ளையார் கோவிலடி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

(cs 42568) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 05 . 1947



இறப்பு 29 . 01 . 2022

### செல்லத்துரை எட்மன்பீரிஸ் (பாலேந்திரா)

யாழ்ப்பாணம் பாசையூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை எட்மன் பீரிஸ் (பாலேந்திரா) அவர்கள் கடந்த (29.01.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுசிங்கம் மற்றும் பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகனும், எவலின் (நிலா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யேசுரெட்ணம், தனிநாயகம் மற்றும் அன்ரநாயகம், யூபிறேசியா, யூக்கிறிஸ்ரின் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நளாயினி (NDRSC-மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), தமிழினியன் (யாழ். மாவட்ட விளையாட்டு நிருபர் - தினகரன் பத்திரிகை), அபிராமி (கலைப்பீடாதிபதி அலுவலகம், யாழ். பல்கலைக் கழகம்), சாவித்திரி (MDTF மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனல்ட் (உதவிப் பொது முகாமையாளர் - ஜனசக்தி காப்புறுதி நிறுவனம், உப தலைவர் - இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், தலைவர் - யாழ். உதை பந்தாட்ட லீக், முன்னாள் யாழ். மாநகர முதல்வர்), சோபிதவதனி, றெமில்சன் (நிதிக்கிளை - யாழ் பல்கலைக்கழகம்), மிதிலன் (RR Construction - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், எட்வின், யஸ்ரின் சிபில், காலஞ்சென்ற ஜெலின் மற்றும் பெலஸ்ரின் கொட்வின் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரபோர்ட், நத்தாசா, சித்திராங்கன், ஆரோன், ஆரணவர்மன், ஆருஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (31.01.2022) திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.03, 1ஆம் குறுக்குத் தெரு,
பாசையூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 570 270

(CS 1094) 1/6

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி மகாலிங்கம் (மகான்)

**(இ.போ.ச. பேருந்து முன்னாள் சாரதியும், யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய மேற்பார்வையாளரும்)**

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் பட்டினசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் (மகான்) நேற்று (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னியர் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (சிறீகுமரன்ஸ் நகைமாடம் - உரிமையாளர்), சதீஸ்குமார் (லண்டன்), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாமகள் (கல்யாணி), சுதாமதி (சூட்டி), ஜீவிதா (மாலா), து.ஜீவானந்தன் (அதிபர், யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பரமேஸ்வரி (பரம்), இராசலிங்கம் (பூச்சி-அமரர்), தர்மலிங்கம் (வண்டு-அமரர்), சுந்தரலிங்கம் (ஓசு-அமரர்), பஞ்சலிங்கம் (ராசா), சந்திரலிங்கம் (தம்பி - பிரான்ஸ்), யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டனுசுயன், சாங்கர்ஷணன், சபிர்தன், அஷ்வின், சயன், ரிதீஷ், ரினுஷா, கஜானிகா, பிரித்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.02.2022) புதன் கிழமை பட்டினசபை வீதி, மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய், பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்னை மடியில் 09.08.1945

30.01.2022

பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பப்ஜி' மோகத்தால் நேர்ந்த விபரீதம்

'பப்ஜி' கேம் விளையாடியதை தட்டிக்கேட்டதால் ஆத்திரமடைந்த சிறுவன் ஒருவன், தாய் மற்றும் குடும்ப உறுப்பினர்களைச் சுட்டுக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் தலைநகர் லாகூரைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவனே இவ்வாறு சுட்டுக் கொன்றுள்ளான் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.


### வேலையாள் தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றிற்கு கடையில் நின்று வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை. 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 330 7073**

### மணமகள் தேவை

1977 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் கடக ராசி ஆயிலியம் நட்சத்திரம் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**076 3066 719**


## பத்தாம் ஆண்டு நினைவுகளுடன் !!!



அமரர் **நடராசா காசிவேந்தன்**

(MA, B.Com, Dip. in pds. Dip. in mgt)

(முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம் உடுவில்)

**தோற்றம்**
**25.06.1967**

**மறைவு**
**22.01.2012**

திதி: தை அமாவாசை (31.01.2022)

பள்ளிப் பருவமதில் பக்குவமாய் கல்விகற்று
பட்டங்கள் பல பெற்று பாரினிலே வாழ்ந்தவரே
பிள்ளைகளின் கல்விக்கு தொடக்கவுரை எழுதி
முடிவுரை காணாது விண்ணகம் சென்றவரே!
ஈரைந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்....

**கற்பகப் பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் கிழக்கு.**

**மனைவி, பிள்ளைகள்.**

(cs.42563) (2.6)

## மரண அறிவித்தல்

**மலர்வு** 07 . 06 . 1944

**உதிர்வு** 28 . 01 . 2022



## திருமதி பத்மினிதேவி பரமநாதன்

யாழ். பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஸ்கார்பரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மினிதேவி பரமநாதன் கடந்த (28.01.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (கலைவாணி அரிசி ஆலை ஸ்தாபகரும், முன்னாள் உரிமையாளரும் - கொக்குவில் கிழக்கு), தையல்நாயகி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற தியாகராஜா, சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், பரமநாதன் அவர்களின் அருமைத் துணைவியாரும், Dr.அகிலன், பகிரதி, கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.தாரிணி, பத்மநாதன், அனில்பிரியன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலா, விமலா, லலிதா, சிறிரங்கநாதன், கலைவாணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபாகரன், சிவானந்தன், கலாமணி, காலஞ்சென்ற சரோஜினிதேவி, கைலைநாதன், புஸ்பநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருணி, ஹரிஷ் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சோபி, ரூபன், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2022) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 42570) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



# கிருஷ்ணானந்தன் றாகிலன்

(பொலிஸ் உத்தியோகத்தர்)



**பிறப்பு**
**12.01.1990**

**இறப்பு**
**10.02.2021**

அன்பின் உருவமாய்
அரவணைப்பின் சிகரமாய்
எம்மை வழி நடத்திய
எம் இதயத்தின் திருவிளக்கே!
ஓர் ஆண்டு கடந்து
வருடங்கள் உருண்டாலும்
வலியின் வாசம் மட்டும்
விழிக்கருவில் வடுபோல்
விலகாமல் உள்ளதே
காலமெல்லாம் கண்ணீரில்

மிதக்கவிட்டு போனதேனோ...?
வாழ்ந்தவை யாவும் நினைவாகி
நீங்கள் மறைந்தது மட்டும்
கனவாகிப் போகாதா?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்கள் தூவி
உங்களையே எண்ணி வாடுகிறோம்
அணையாத தீபம் போல்
உங்கள் சுடர் என்றும்
எம்மை வாழ வைக்கும்

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**கிருஷ்ணானந்தன் (அப்பா)**
**(ராசன்)**

(CS.42541) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் சமமான கல்வி முறைமை அவசியம்

## பொதுப்பணி மையம் வலியுறுத்து

'ஒரே நாடு ஒரே சட்டம்' எண்ணக்கருவை யதார்த்தமாக்கிக் கொள்ள வேண்டுமாயின், அனைவருக்கும் சமமான கல்வி முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பொதுப்பணி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த அல்விஸ் தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நமசிவாயம் தர்மலிங்கம்**
(ஆசாரி - சின்னண்ணை)
திதி: தை அமாவாசை

பண்பின் சிகரமாய் பாசத்தின்
- உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு
- வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பகர்களுக்கு
- இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா !
எம் உள்ளங்களில் என்றும்
- நிலைத்திருக்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
15/16, நடுத்தெருலேன் (அன்னை இல்லம்)
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 910 3392

(cs 42557) (2-7)



## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 12 . 1948
இறப்பு 29 . 01 . 2022

**திரு.சோமசுந்தரம் கிருபாகரன்**
(முன்னாள் புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபன கொள்வனவு முகாமையாளர்)

யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், புத்தளம், ஐக்கிய அமெரிக்கா Hicksville ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கிருபாகரன் அவர்கள் 29.01.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பவளராணி அவர்களின் அன்புக் கணவரும், கருணாகரன் (வரியப்புலம், சுன்னாகம்), வனிதாதேவி (அச்சுவேலி), வனஜாதேவி(அச்சுவேலி), ஞானகரன்(கனடா), கிரிஜாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரசாத் (கனடா), தனுஷ்யா(ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேலி (கனடா), நிர்மலன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அருமை மாமனாரும், ஜான்சிராணி (வரியப்புலம்), காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, மார்க்கண்டு மற்றும் கோமதி (கனடா), வேலருள் (கனடா), ஸ்ரீஷண்முகராஜா (ஐக்கிய அமெரிக்கா), பிறேமராணி (ஐக்கிய அமெரிக்கா), நிர்மலராஜன்(ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவிந்த்(ஐக்கிய அமெரிக்கா) அவர்களின் அருமை பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
பிரசாத் - மகன்
• Mobile : +178 0289 3362
தனுஷ்யா - மகள்
• Mobile : +151 6499 1016
கருணாகரன் - சகோதரன்
• Mobile : +947 7733 6361
வனஜாதேவி - சகோதரி
• Mobile : +947 775 70305

(cs42560) (2-6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 03 . 1948
மறைவு 10 . 02 . 2021

துன்னாலை வடக்கு துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் அரியரத்தினம் வைகுந்தநாதன்**

(ஓய்வுபெற்ற வருமானவரி பரிசோதகர் Revenue Inspector)
சமாதான நீதிவான் JP

திதி - சதுர்த்தசி (31.01.2022) திங்கட்கிழமை

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்முடன் எமக்காக வாழ்ந்த எங்கள் குலவிளக்கே !
எம்முடன் நீர் வாழ்ந்த வாழ்வை பொக்கிஷமாய் வைத்து
உம் நினைவுகளுடன் வாழ்கின்றோம் .
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம் .

நினைவுகளுடன் ...
வைகுந்தநாதன் நீதிராசா
(மகன் பிரான்ஸ் 0033751012109)
வர்ணகுலசிங்கம் பிரபாகரன்
(மருமகன் செட்டிகுளம் வவுனியா 0778646433)

(CS 00961) 1-6



## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 11 . 1948
மறைவு 30 . 01 . 2022

**குஞ்சிதபாதம் சரஸ்வதி**

குருந்தடி பிள்ளையார் கோவிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் பத்தானை வீதி, தாவடி தெற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சிதபாதம் சரஸ்வதி நேற்று (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், குஞ்சிதபாதம் அவர்களின் பாசமிகு மனைவியும், செந்தூரன் (டென்மார்க்), மகிபன் (விற்பனை பிரதிநிதி-ACL Cables -PLC), சியாமளா ஆகியோரின் அன்புத் தாயாரும், நிவேதா (டென்மார்க்), ராதிகா (இலங்கை வங்கி - பண்டத்தரிப்பு), சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சிவசுந்தரம், துரைசிங்கம் மற்றும் மாணிக்கவாசகர், சின்னத்துரை, காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், டென்மார்க்கைச் சேர்ந்த நிஷானா, சஸ்வின், சர்வின் மற்றும் நிஷான், நேத்திரா, ஜஸ்விகன், சங்கரிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2022) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

0777 583 617

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18306) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்...

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டி அடிப்படையிலான இறுதித் தீர்வை வலியுறுத்தியும், அதற்கு இடைப்பட்ட காலத்தில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் 6 கையெழுத்திட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்றுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர்க் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் ஈகச்சுடரேற்றப்பட்டு பேரணி மு.ப. 10.15 மணியளவில் ஆரம்பமானது. 13ஆம் திருத்தத்தை நிராகரிக்கும் குறியீட்டு வடிவம் காட்சிப்படுத்தப்பட்ட வாகனத்தின் பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டனர். சிவப்பு, மஞ்சள் கொடிகளை ஏந்தியவாறு அவர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

பேரணி நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியிலுள்ள கிட்டுப்பூங்காவில் நிறைவடைந்தது. அங்கு 13ஆம் திருத்தம் என்று எழுதப்பட்ட சவப்பெட்டி வைக்கப்பட்டு அதற்கு ஒப்பாரி வைத்து மேடையில் வைத்தனர். அதன் பின்னர் நேற்றைய போராட்டத்தின் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் கொள்கை விளக்க உரை இடம்பெற்றது.

இதன்போது, 'கையில் கொடுத்த உறவுகள் எங்கே?', 'ஓமந்தையில் ஒப்படைத்த உறவுகள் எங்கே?', 'வட்டுவாகலில் ஒப்படைத்த உறவுகள் எங்கே?', 'அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'எமது கடல் எமக்கு வேண்டும்', 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் பார்த்தீபன் கனவு மலரட்டும்', 'வேண்டும் வேண்டும் சமஷ்டி வேண்டும்', 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் தமிழர் தேசம் மலரட்டும்' என்ற கோஷங்கள் விண்ணதிர எழுப்பப்பட்டன. (ஒ-5,26)

## பூகோள...

கள் முன்னணி தனது பிரகடனத்தில் தெரிவித்துள்ளது. கிட்டுப்பூங்காவில் பேரணி நிறைவடைந்த பின்னர் அங்கு வெளியிடப்பட்ட பிரகடனத்தின் முக்கிய சாரம்சம் வருமாறு-

தமிழ்த் தேச மக்கள் தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 70 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009 இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியும் ஒவ்வொரு தேர்தல்களூடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

வடக்கு- கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கப்படுகின்ற தீர்வுக்குப் பதிலாக - ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு கட்டமைப்பாக (13 ஆம் திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இருக்குமானால் அந்த வகையான செயல், தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைக்கும் வகையிலேயே அமையும் என்ற விடயத்தை இந்தப்போராட்டம் பிரகடனப்படுத்துகிறது. தமிழ் மக்கள் காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த் தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது வேறு எந்தவொரு திருத்தத்தையோ வலியுறுத்துகின்ற தரப்புக்கள், அம்முயற்சியைக் கைவிட வேண்டுமென இந்தப்போராட்டமூடாக வலியுறுத்துகிறோம்.

இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவை பலப்படுத்திக்கொள்வதையோ அல்லது தனது பூகோள அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென் ஆசிய பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதையோ ஈழத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவை எமது நட்புசக்தியாகவே கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கு மிகுந்த விருப்பமும் அக்கறையும் ஈடுபாடும் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் தமது நட்புச் சக்தியாக கருதும் இந்தியா, தனது பூகோள நலன்களைப் பூர்த்திசெய்வதற்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்கி, தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு கோருகின்றோம்.

தமிழ்மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில், தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் அதனுடைய தனித்துவமான இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக்கூடிய 'சமஷ்டி' அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் இந்தப் போராட்டம் கோருகின்றது- என்று கூறப்பட்டுள்ளது. (ஒ-26)

## 'கறுப்பு....

ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாண நகரில் 'கறுப்பு ஜனவரி' கவனவீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ-22)

## ஜெனிவாவுக்கு...

கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம் பெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படும் விடயம் பூதாகரமான பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. இது தொடர்பில் பொது அமைப்புக்கள், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம்.

வருகின்ற மாதம் 28 ஆம் திகதி ஐ.நாவில் ஆரம்பமாகவுள்ள ஜெனிவா பேரவை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான எழுத்துமூலமான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வெளியிடும். மார்ச் 3 ஆம் திகதி இலங்கை சம்பந்தமான ஒரு ஆய்வு நடைபெறும். அதற்கு உதவியாக இன்றைய நிலையை அவர்களுக்கு அறியத்தருவது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில், மற்றைய பங்காளிக் கட்சிகளுடனும் இணைந்து ஒரு ஆவணத்தைத் தயார் செய்கிறோம். ஏற்கனவே ஒரு ஆவண வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. அது சம்பந்தனின் கையில் இருக்கிறது. நாளை மறுநாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய பங்காளிக் கட்சிகளோடு இந்த ஆவணம் பகிரப்படும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அது பகிரப்பட்டு விரைவிலே அதற்கு இணக்கம் காணப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடிதமாக இரா.சம்பந்தனின் ஒப்பத்தோடு அனுப்பி வைக்கப்படும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாகவும் தீர்மானம் எடுத்துள்ளோம். அந்தக் கடிதம் அனுப்ப வேண்டும் என்ற ஒரு முயற்சி தொடங்கப்பட்ட போது எங்களது பங்காளிக்கட்சி ரெலோ அந்த முன்னெடுப்பை ஆரம்பித்தது.

முதலில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற கடிதம் என்ற தலைப்புடனேயே அது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் டிசெம்பர் 21 ஆம் திகதிக்கு பிறகு, இலங்கைத் தமிழரசுக் கட்சி அதில் இணைந்து செயலாற்றிய பின், அந்தக் கடிதத்தின் பொருள், உள்ளடக்கம் முற்றிலுமாக மாற்றப்பட்டது. அது இலங்கை- இந்திய ஒப்பந்தம், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை என்கிற விடயமாக மாற்றப்பட்டது. ரெலோவால் ஒரு பக்க கடிதமாக ஆரம்பமான கடிதம் 7 பக்கமாக, மிக விரிவாக மக்கள் எங்களுக்கு கிரமமாக கொடுத்திருக்கிற ஆணையையும் சுட்டிக்காட்டி அமைந்தது. சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி முறையிலான ஆட்சி முறை தான் எங்களுடைய அரசியல் அபிலாஷை. அதுவே தமிழ் மக்கள் எங்களுக்குக் கொடுத்துள்ள ஆணை.

ஆனால், ஆரம்பத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் இருந்தது என்ற காரணத்துக்காகவே இன்றைக்கும் அது 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற கடிதமாகச் சொல்லப்படுகின்றது. அந்த விடயம் சம்பந்தமாக மக்கள் திசைதிருப்பப்படுகிறார்கள். மக்களுக்குத் தவறான ஒரு பிம்பம் காட்டப்படுகிறது.

ஆனால் கடிதத்தை வாசிப்பவர்களுக்கு ஆரம்பத்தில் ரெலோ எடுத்த முன்னெடுப்புக்கும், இறுதியில் கடிதம் கையளிக்கப்பட்டபோது இருந்த உள்ளடக்கத்துக்கும் இடையிலான வித்தியாசம் புலப்படும். 13 ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பில் உள்ள ஒரு விடயம். அதை நடைமுறைப்படுத்த இன்னொரு வேண்டுதல் கொடுக்கிற அவசியம் கிடையாது. எமது கடிதம் இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இந்திய அரசோடு முன்னெடுக்கப்பட விருக்கின்ற பேச்சுக்கள், அதில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் ஈடுபட்டுள்ளார்.

நீதி அமைச்சர் அலி சப்ரி,வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் சந்தித்து பேசினேன். பயங்கரவாதத் தடுப்பு சட்டம் மறுசீரமைக்கப்படுகிறது என்று ஒரு திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்டது.

அதைப் பற்றியும் கூட்டத்தில் பேசினோம். அது ஒரு கண்துடைப்பு நாடகம் என்று கூடச் செல்ல முடியாது. ஏனெனில் அதில் எதுவுமேயில்லை. ஒரு மாற்றமும் கிடையாது.

இப்படி ஒரு மோசமான செயற்பாட்டில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது. ஜனாதிபதியுடனான பேச்சு தொடர்பிலும் கதைத்தோம். சென்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கூட பேராசிரியர் பீரிஸ் என்னை அணுகி ,ஜனாதிபதி பேச்சுக்கு திகதி குறிக்கும் படி கூறியதாகச் சென்னார். நீங்கள் காணும் போது எல்லாம் திகதி குறிக்க வேண்டும் என்கிறீர்கள். காணும் நேரத்தில் சொல்லும் கதையே தவிர, நடக்கும் கதையாக இல்லை என்றேன். ஜெனிவாவுக்கு முன்னர் கதைத்து ஒரு படம் காட்ட முயல்கிறார்கள் - என்றார். (ஒ-110)

## கடும்...

கட்டும் இது சமாதானத்துக்கான - ஒற்றுமைக்கான நேரம். தயவு செய்து அதனைக் குழப்ப வேண்டாம். இதுவரை காலமும் அனுபவித்த விரக்தி, துன்பங்கள் போதும். இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிடைக்காத ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கை காரணமாக எத்தனையோ இளையோரின் எதிர்காலம் கருகிவிட்டது. இப்போதும் சில தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு செய்ய முயற்சிக்கின்றார்கள். அவ்வாறான பிழையான அரசியல்வாதிகள் பின்னால் செல்ல வேண்டாம் என்று வடக்கிலுள்ள இளையோரைக் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் இப்போதும் தூண்டி விட்டுக்கொண்டு விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை. பிரச்சினைகள் இருந்தால்தான் தாங்கள் அரசியல் நடத்தலாம் என்று எண்ணுகின்றார்கள்.

வடக்கு - தெற்கு இடையிலான இடைவெளியைப் பூசி மெழுக விரும்பவில்லை. இடைவெளியை நிரந்தரப் பாலம் அமைத்து இணைப்போம். கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இன்று (நேற்று) சென்றோம். அங்குள்ள மாணவர்கள் சிங்களத்தில் பாடல் பாடினார்கள். இதைத்தான் எதிர்பார்க்கின்றோம். யாழ். பல்கலைக்கழகம் சென்றோம். அங்கும் மாணவர்கள் முன்னோக்கிய சிந்தனையுடன் இருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் வடக்கு மாணவர்கள் தெற்குக்கும், தெற்கு மாணவர்கள் வடக்குக்கும் வரவேண்டும். கலாசார ரீதியான விடயங்கள், விவாதங்கள், விளையாட்டுப் போட்டிகள் என்று இரு தரப்புக்கும் இடையிலான உறவு மலர வேண்டும். இதற்கு மொழி தடையாக இருக்காது. ஆங்கில மொழியில் விடயங்களைப் புரிந்து கொண்டு செயலாற்றலாம்- என்றார். (ஒ-5)

## சடலம்...

ரிழந்தவரின் இளைய சகோதரர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தற்கொலையா? அல்லது கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ-125)

## பரீட்சைக்...

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணில் மீதான குற்றச்சாட்டை இரத்துச் செய்யக்கோரி மனு!

**கொழும்பு, ஜன. 31**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை இரத்துச் செய்ய வேண்டும் -என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை பரிசீலிக்க அரசியல் பழிவாங்கல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

இந்த மனுவை எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, லபர் தாஹிர் மற்றும் டி.எம். சமரகோன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், மனுவை மார்ச் 30ஆம் திகதி விசாரிக்க உத்தரவிட்டனர்.

கடந்த அரசாங்கத்தின் போது அமைக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு செயலகம் தொடர்பான பல செயற்பாடுகளுக்கு தானே பொறுப்பு எனக் கூறி அரசியல் பழிவாங்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தமக்கு எதிராக பல பரிந்துரைகளை வழங்கியுள்ளது என்று மனுதாரரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமராக இருந்தபோது ஊழல் ஒழிப்புச் செயலகம் தனக்குகீழ் இயங்கவில்லை எனவும், அதன் செயற்பாடுகளில் தான் தலையிடவில்லை எனவும் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு செயலகத்தால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் பேரில் பல்வேறு நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற அரச நிறுவனங்களாலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# மகாத்மா காந்தியின் சிரார்த்ததினம் நேற்று




யாழ்ப்பாணம், ஜன.31

மகாத்மா காந்தியின் 74ஆவது சிரார்த்த தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்றிலில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு முன்னாக நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் இந்தியத் துணைத் தூதரகம் ஆகியன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மகாத்மாகாந்தி சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் காந்தி சேவா சங்கத்தால் காந்தியம் பத்திரிகையும் வெளியிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் பத்திரிகையை வெளியிட்டு வைத்தார். (எ-27)

27ஆவது ஆண்டில் காலடி பதிக்கும்
நியூ பாரதி கல்வி நிலையம்
கந்தரோடை, சுன்னாகம்.
தரம் 6-11 வரை
புதிய கல்வியாண்டு - 2022 ஆரம்பம்
02.02.2022 (புதன்கிழமை) மாலை 3.00 மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவை!

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 6 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல். 1 நிலப்பரப்பின் விலை 3.5 லட்சம். (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்)
076 890 9259, 077 015 0353

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)
077 65 85 999

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 06 . 01 . 1933
மறைவு 10 . 02 . 2021

கிளிநொச்சி பளை மாசாரைப் பிறப்பிடமாகவும்
யாழ் நீராவியடி, பிரான்ஸ், ஜேர்மனி
ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் இரத்தினம் இராசம்மா**

திதி: சதுர்த்தசி

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்களின் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்
அன்னையின் ஆத்மா
இறைபாதம் சரணடைய பிரார்த்திப்போமாக
ஓம் ...சாந்தி! ஓம்... சாந்தி!! ஓம்... சாந்தி!!!
குடும்பத்தினர்.
077 990 5518
(cs 42566) (2.6)

**மணமகள் தேவை**

யாழ்.வடமராட்சி, இந்து 1983 இல் திருவோணம் நட்சத்திரம் மகர ராசியில் பிறந்த அரச சிற்றூழியராக தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.
077 803 6779
(cr.37461) (2.6)

**ஆசிரியர்கள் தேவை**

யாழ்நகர தனியார் கல்வி நிலையம் ஒன்றில்
- விவசாயம் விஞ்ஞானம்
- புவியியல்
- தமிழ்
- வரலாறு

போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு தகுதிவாய்ந்த இளம் ஆசிரியர்களும். தட்டச்சாளரும் (Typest) தேவை. ஆர்வமுடையோர்
076 258 9186 என்னும் Whatsapp, Viber இலக்கத்திற்கு உங்கள் விபரங்களையும் தொடர்இலக்கத்தையும் அனுப்பிவைக்கவும்.
(cr.37462) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.